அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
கோவை -641 014.

**குறிப்பாணை எண் : 1942 /இ1/2024/நாள் :07.08.2024**

பொருள் : அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, கோவை - கல்வி உதவித்தொகை 2024-2025 ஆம் கல்வியாண்டு பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட மற்றும் /சீர் மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவது - தொடர்பாக.

**********

இப்பயிலகத்தில் நடப்புக் கல்வியாண்டில் (2024-2025) முதலாமாண்டு மற்றும் நேரடி இரண்டாமாண்டு கல்வி பயிலும் - பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட /சீர் மரபினர் மாணவ/மாணவியர்களில் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2,50,000/- க்கு குறைவாக உள்ள தகுதிபெறும் மாணவ/மாணவியர்கள் புதியது மற்றும் புதுபித்தல் விண்ணப்பங்களை **www.gptccbe.co.in** என்ற கல்லூரி இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து கொண்டு அதனைப் விடுதல்கள் ஏதுமின்றி பூர்த்தி செய்து வரும் 31.08.2024-ம் நாளுக்குள் தவறாமல் அலுவலகத்தில் சமா்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், மேற்கண்ட விண்ணப்பத்துடன் மாணவ/மாணவியர்கள் பெயரில் ஏதாவதொரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் கணக்குத் துவங்கி அதற்கான கணக்கு எண் **IFSC** எண் மற்றும் **MICR** எண் போன்றவைகளுடன் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருப்பின் அதற்கான சான்றுடன் இணைத்து மேற்கண்ட நாளுக்குள் அலுவலகத்தில் சமா்ப்பிக்க அறிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட நாளுக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்படுகிறது.

விண்ணப்பத்துடன் மாணவியர்/ மாணவர்கள் சமா்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் :

1). முதல் பட்டதாரியாக இருந்தால் அதற்கான சான்று (வட்டாட்சியர்)
2) தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் தனிநபர் கணக்கு துவங்கியதற்கான வங்கி கணக்கு புத்தகம் (Bank Pass book)
3) வருமான சான்று அசல் (Income certificate) நடப்பாண்டிற்கு.
4) ஆதார் அட்டை நகல்
5) இதற்கு முன்னர் பயின்ற பள்ளி மதிப்பெண்சான்று (நகல்)
6) ஆதார் எண் மொபைல் எண்ணுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்
7) ஆதார் எண் வங்கி கணக்குடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்
8) ஜாதிச் சான்றிதழ் (இணைய வழியாக பெறப்பட்ட ஜாதிச் சான்று மட்டுமே ஏற்கப்படும்)

(ஒம்) பூ.தேன்மொழி,
முதல்வர்

முதல்வருக்காக - 7/8/24
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி
கோவை- 641 014.

பெறுநர்

அனைத்துத் துறைத் தலைவர்கள்
தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது-
(தங்கள் துறை மாணவ/மாணவியர்கள் மேற்கண்ட நாளுக்குள் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து அலுவலகத்திற்கு அனுப்பி பயன் பெற ஏதுவாக மாணவர்களுக்கு அறிவுறுத்தக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.)

நகல் : அறிவிப்புப் பலகை (கல்லூரி பிரதான கட்டிடம் மற்றும் விடுதி)
" இணையதளம்
" நோடல் அலுவலர், கல்வி உதவித்தொகை (BC/MBC)